# தரம் - 12

# தமிழ்

## தேர்ச்சி 2.0



## குற்றம் கடிதல்

## திருக்குறள்-அரசியல்

Mr.J.Ranjithkumar
Bt/Bt/Eravur Tamil M.V,Batticaloa.

அரசன், தன்னிடம் குற்றங்கள் ஏற்படாமல் பாதுகாத்தல் பற்றி கூறப்பட்டது.

# குற்றம் கடிதல்






**1) இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொற்களைக்கொண்டு குறட்பாக்களை பூரணப்படுத்துக ?**

பெருக்கம், தினைத்துணையாம், இவறியான் செல்வம், இறைக்கும், வைத்தூறு போலக் கெடும், நன்றி பயவா வினை, அற்றம், நீங்கிப் பிறர்குற்றம், அன்று, காதல காதல்

1.1 “செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
............. பெருமிதம் நீர்த்து”

1.2 “இவறலும் மாண்பிறந்த மாணமும் மாணா
உவகையும் ஏதம் .............”



* பெருக்கம், தினைத்துணையாம், இவறியான் செல்வம், இறைக்கும், வைத்தூறு போலக் கெடும், நன்றி பயவா வினை, அற்றம், நீங்கிப் பிறர்குற்றம், அன்று, காதல காதல்

1.3 "………………. குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்"

1.4 "குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
………… தரூஉம் பகை"

1.5 "வருமுன்னர்க் காவாதான் வாழ்கை எரிமுன்னர்
……………………………"



1.6 "தன்குற்றம் ………………. காண்கில்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு"

*

* பெருக்கம், தினைத்துணையாம், இவறியான் செல்வம், இறைக்கும், வைத்தூறு போலக் கெடும், நன்றி பயவா வினை, அற்றம், நீங்கிப் பிறர்குற்றம், அன்று, காதல காதல்

1.7 “செயற்பால செய்யாது ………………………
உயற்பாலது அன்றிக் கெடும்”

1.8 “பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவது ஒன்று ……….”

1.9 “வியவற்க எஞ்ஞான்றும் தன்னை: நயவற்க
…………………………….”



1.10 “………………… அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்”

1.1 பெருக்கம்
1.2 இறைக்கு”
1.3 தினைத்துணையாம்
1.4 அற்றம்
1.5 வைத்தூறு போலக் கெடும்
1.6 நீங்கிப் பிறர்குற்றம்
1.7 இவறியான் செல்வம்
1.8 அன்று
1.9 நன்றி பயவா வினை
1.10 காதல காதல்



## 2) பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

2.1 "செருக்கும் சினமும் சிறுமையும்……." இங்கு செருக்கு என்பது

1. அகந்தை
2. கோபம்
3. மேன்மை
4. காமம்

2.2 "இவறலும் மாண்பிறந்த மாணமும் மாணா உவகையும் ஏதம் …………..". இங்கு ஏதம் என்பது



1. அரண்
2. ஏற்றம்
3. குற்றம்
4. மானம்

2.3 “தினைத்துணையாம் குற்றம் வரினும்
பனைத்துணையாக்கொள்வர் பழிநாணு வார்”
இங்கு நாணுவார் என்பது

1. நீக்குவார்
2. அஞ்சுவார்
3. தழுவுவார்
4. சிரிப்பார்

2.4 “குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை” இங்கு அற்றம் என்பது

1. உறவு
2. தமர்
3. பகை
4. அழிவு



2.5 “வருமுன்னர்க் காவாதான் வாழ்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்” இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது

1. உவமை அணி
2. உருவக அணி
3. தற்குறிப்பேற்ற அணி
4. உயர்வு நவிழ்ச்சி அணி

2.6 “தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கில்பின் என்குற்றம் ஆகும் இறைக்கு” இங்கு இறை என்பது

1. மக்கள்
2. அரசன்
3. மாந்தர்
4. நண்பர்



2.7 "செயற்பால செய்யாது இவறியான்......" இங்கு இவறியான் எனப்படுபவர்

1. வள்ளல்
2. சிரஞ்சீவி
3. உலோபி
4. மனிதன்

2.8 "பற்றுள்ளம் என்னும் இவறன்மை ....." இங்கு பற்று என்பது

1. பண்பு
2. கருணை
3. குணம்
4. விருப்பம்



2.9 “வியவற்க எஞ்ஞான்றும் தன்னை: நயவற்க
நன்றி பயவா வினை” இங்கு வினை என்பது

1. செயல்
2. வியத்தல்
3. வினாவுதல்
4. விளைதல்

2.10 “காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்” இங்கு ஏதிலார் என்பதன் எதிர்க்கருத்து

1. பகைவர்
2. உறவினர்
3. எதிரி
4. பகையரசன்



- 2.1 (1) அகந்தை
- 2.2 (3) குற்றம்
- 2.3 (2) அஞ்சுவார்
- 2.4 (4) அழிவு
- 2.5 (1) உவமை அணி

- 2.6 (2) அரசன்
- 2.7 (3) உலோபி
- 2.8 (4) விருப்பம்
- 2.9 (1) செயல்
- 2.10 (2) உறவினர்



*

3) பொருத்தமான கூற்றினை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

3.1 குற்றம் கடிதல் என்பது,

1) அறிவு பற்றியும் அதன் முக்கியத்தும் பற்றியும் கூறுவது
2) தன்னை நல்வழிப்படுத்தும் பெரியாரைப் பற்றி கூறுவது
3) அரசன், தன்னிடம் குற்றங்கள் ஏற்படாமல் பாதுகாத்தல் பற்றி கூறவது



4) நற்பண்புகள் இல்லாத சிறியோருடன் சேராமை பற்றி கூறுவது.

(.....)

## 3.2 குற்றம் கடிதலில் குற்றங்களாவன,

1) இரக்கம், உதவி, அன்பு, பிறரை மதித்தல், பொருத்தமற்ற செல்வம்
2) இரக்கம், செருக்கு, சினம், உலோபத்தனம், பொருத்தமற்ற மானம்
3) செருக்கு, சினம், காமம், உலோபத்தனம், பொருத்தமற்ற மானம்,அளவற்ற பொருத்தமில்லாத மகிழ்ச்சி
4) செருக்கு, சினம், காமம், உலோபத்தனம், பொருத்தமற்ற மானம், அளவற்ற கொடை (…..)



## 3.3 குற்றம் கடிதலில் குற்றம் கடியும் வழிகள் அல்லாதது,

1) சிறு குற்றத்தையும் பெரிதாக நினைத்து தவிர்த்தல்
2) அழிவை ஏற்படுத்தும் என்பதை அறிந்து குற்றம் வராமல் காத்தல்
3) வருமுன்காத்தல், பிறர் குற்றம் காணாமல் தன் குற்றத்தை காணல்
4) பகைக்கு பின் பழிவாங்கல், பகைவரை அழித்து குற்றம் நீக்குதல் (.....)



3.4 குற்றம் கடிதலில் குற்றம் கடியும் வழிகளில் சிறப்பானவையாக அமைவது,

1) உலோபத்தனத்தை நீக்கிக் கொள்ளல்,தன்னை புகழாமை, தான் விரும்பும் விடயங்களை மற்றவர் அறியாமற் பாதுகாத்தல்
2) உலோபத்தனத்தை நீக்கிக் கொள்ளல்,தன்னை புகழாமை, தான் விரும்பும் விடயங்களை மற்றவருக்கும் அறிவித்தல்
3) உலோபத்தனத்தை நீக்கிக் கொள்ளல்,தன்னை புகழச்செய்தல், தான் விரும்பும் விடயங்களை மற்றவர் அறியாமற் பாதுகாத்தல்
4) உலோபத்தனத்தை ஏற்றுக் கொள்ளல்,தன்னை புகழாமை, தான் விரும்பும் விடயங்களை மற்றவர் அறியாமற் பாதுகாத்தல்



(…..)

* 3.5 குற்றம் கடிதலில் வருமுன் காவாதான் வாழ்க்கை… என்ற குறளில் வரும் உவமையணி உணர்த்துவது,

1) குற்றத்தைத் தடுப்பவனுடைய வாழ்க்கை, தீயின் முன்வைக்கப்பட்ட வைக்கோல் போர்வைக்கு உவமையாக கூறப்பட்டுள்ளமை
2) குற்றத்தைத் தடுக்காதவனுடைய வாழ்க்கை, தீயின் முன்வைக்கப்பட்ட வைக்கோல் போர்வைக்கு உவமையாக கூறப்பட்டுள்ளமை
3) குற்றத்தைத் மதிப்பவனுடைய வாழ்க்கை, தீயின் முன்வைக்கப்பட்ட வைக்கோல் போர்வைக்கு உவமையாக கூறப்பட்டுள்ளமை
4) குற்றத்தைத் தக்கவைப்பவனுடைய வாழ்க்கை, தீயின் முன்வைக்கப்பட்ட வைக்கோல் போர்வைக்கு உவமையாக கூறப்பட்டுள்ளமை (…..)



*

- **விடைகள்**
- 3)

| | |
|---|---|
| 3.1 | (3) |
| 3.2 | (3) |
| 3.3 | (4) |
| 3.4 | (1) |
| 3.5 | (2) |



**4) பின்வருவன சரியாயின் சரி (சரி) என்றும் பிழையாயின் பிழை (பிழை) என்றும் எழுதுக.**

4.1 காமம்,வெகுளி,கஞ்சத்தனம்,மானம்,உவகை,மதம் என்று குற்றங்கள் பல வகையாக கூறப்படும் ( )

4.2 பழியை அஞ்சுபவர்,தம் கண் பனையின் அளவாம் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாக அன்றித் தினையின் அளவாக கொள்வர் ( )

4.3 இறுதி பயக்கும் பகை குற்றமே,ஆகையால் அக்குற்றம் தன்கண் வராமல் காக்க வேண்டும். ( )



4.4 குற்றம் சிறியதாயினும் அதனால் பெரிய செல்வமே அழிந்து விடும். ( )

4.5 முன்னர் பிறர் குற்றத்தைக் கண்டு கடிந்து,பின்னர் தன்குற்றம் காண வல்லவனாயின் அவனுக்கு ஆகக் கூடிய குற்றங்கள் ஏதும் இல்லை. ( )

4.6 பொருளிடத்து உலோபமஞ் செய்தவனதும் செல்வமானதும் வறிதே கெடும் ( )

4.7 பொருளை விடத் தகும் இடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளம் குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் சிறியது ஆகும். ( )



4.8 தன்னைப் புகழாமையும்,தனக்கு நன்மை பயவா வினைகளையும்,மனத்தால் விரும்பாது ஒழிக்க வேண்டும். (   )

4.9 தான் விரும்பும் விடயங்களை மற்றவர் அறியாமல் பாதுகாத்தல் (   )

1.10 “வருமுன்னர்காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்வைத்தூறு போலக் கெடும்” என்ற குறளில் உவமையணி இடம் பெற்றுள்ளது. (   )



## விடைகள்

4)

4.1 (சரி)

4.2 (பிழை)

4.3 (சரி)

4.4 (சரி)

4.5 (பிழை)

4.6 (சரி)

4.7 (பிழை)

4.8 (சரி)

4.9 (சரி)

4.10 (சரி)





# நன்றி



"புத்திதனை தீட்டும் பொக்கிசமான நூலை
நீ நித்தமும் கற்றால் வித்தகனாவாய்
றஞ்சித்.ஜீ (களப்பூர் அமரன்)